# கொழும்பு வந்துள்ள கப்பலில் ஹெலி ஏவுகணை உள்ளதாம்

கடந்த வாரம் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த 'மதவினா' என்ற பெல்ஜியத் தேசக்கப்பலில் இருந்த வெடிமருந்துகளை ஆயுதப்படையினர் சோதனையிட்டனர். 2 5 மோட்டோர் றொக்கற்றுகள் அடங்கிய இரண்டாயிரம் பெட்டிகள் (107 தொன்) என அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் இவை எங்கே ஏற்றப்பட்டன, எங்கே போகின்றன என்ற தகவல்களை — 04 ஆம் பக்கம் பார்க்க

# உணவு அட்டை மீளாய்வால் நிவாரணம் வழங்க முடியாத நிலை

யாழ் குடாவிலுள்ள சில உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்த உலர் உணவு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டதற்கான அறிக்கைகள் பல. நோ. கூ. சங்கங்களுக்குக் கிடைக்காததால் 7 ஆவது கட்ட விநியோகத்தை மேற்கொள்ள முடியாதிருப்பதாக கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவித்தன. யாழ் செயலகம் இம் மாதம் 15 ஆம் திகதியில் இருந்து இவ் விநியோகத்தை —04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 124 பிரமோதூத பங்குனி 17 (31-03-1991) ஞாயிறு

## 'பே ஓடருக்கு' அறவிட்ட தரகுப்பணத்தை வாடிக்கையாளருக்கு வழங்க உத்தரவு

வாடிக்கையாளர் ஒருவருக்கு இலங்கை வங்கி பருத்தித்துறைக்கிளை வழங்கிய வங்கிக்கட்டளைக்கு (Pay order) அறவிட்ட தரகுப்பணத்தை மீண்டும் செலுத்துமாறு கொழும்பு தலைமையகம் உத்தரவிட்டுள்ளது. பே ஓடருக்கு தரகுப்பணம் அறவிடுவது சரியா என்று கேட்டு இந்த வாடிக்கையாளர் கொழும்பு தலைமையகத்துக்கு எழுதியிருந்தார். அதற்குப்பதிலாக இந்த முறை தவறு என்றும் அதனால் பருத்தித்துறை இலங்கை வங்கி அறவிட்ட தரகுப்பணமான 50 ரூபாவைச்செலுத்துமாறு அறிவித்திருந்தது. இது தொடர்பான பணிப்புரை யாழ் பிரதேச முகாமையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. 15

# இலங்கை பிளவுபடக் கூடிய சாத்தியம் அதிகரித்துள்ளது

## இந்துப் பத்திரிகையில் கட்டுரை

நடைபெறும் உள்நாட்டுப் போருடன் இலங்கை நீண்ட காலம் சமாளிக்க முடியும் எனினும், முடிவு சந்தேகத்துக்கு இடமின்றி தெளிவாகத் தெரிகிறது. நாடு பிளவுபடக்கூடிய சாத்தியம் அதிகரித்துள்ளது. இவ்வாறு பிரேம் சங்கர் ஷா 'இந்து' பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார்,

கடந்த வருடம் புலிகளுடனான போர் வெடித்தபோது அரச தரப்பில் பெரும் எதிர்பார்ப்புகள் இருந்தன. பின்னர் புலிகளை ஒழிக்க முடியாது என்ற கருத்தை கொழும்பு ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று

நகரப்பகுதியில் இருந்துவிடுதலைப் புலிகளை விரட்டினால் கிராமப்பகுதியில் இருந்து தாக்குகின்றனர். கிராமப்பகுதியில் இருந்து விரட்டினால் காட்டில் இருந்து தாக்குகின்றனர், நாட்டின் மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பில் போராட்டத்தில் நன்கு ஊன்றி விட்ட ஒரு பெரிய கெரில்லாப் படையைச் சமாளித்து மடக்கும் அளவு எண்ணிக்கையில் இலங்கை ராணுவம் இல்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகளை இலங்கை ராணுவத்தால் சுலபமாக அகற்றி விட முடியாது. பாரிய இந்திய இராணுவமே யாழ்ப்பாண யுத்தத்தில் புலிகளின் கடும் எதிர்ப்பை சமாளிக்க வேண்டியிருந்தது.

புலிகளைச் சமாளிக்க இலங்கை அரசு தனது படையை ஒரு இலட்சமாக அதிகரிக்க திட்டமிடுகிறது இதன் பொருட்டு அவசர அவசரமாக ஆட்சேர்ப்பு நடக்கிறது இந்த அவசரப்போக்கு அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் தரத்தைக் குறைத்து விடுகிறது

அனுபவம் உள்ள படையாக அது மாறினாலும், இந்தப்பழுவைத் தாங்குமளவுக்கு — 04 ஆம் பக்கம் பார்க்க

## போத்தல் 32 ரூபா
## மண்ணெண்ணெய் விலை மேலும் வீழ்ச்சியடைகிறது

மண்ணெண்ணெயின் விலை படிப்படியாகச் சரிந்துள்ளது. நேற்றுத் திருநெல்வேலியில் ஒரு போத்தல் மண்ணெண்ணெய் 32 ரூபாவாக விற்கப்பட்டது.

பெருந்தொகையானோர் இதனை வாங்கிச் சென்றனர் குடாநாட்டிற்குள் பெருமளவு மண்ணெண்ணெய் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் இத — 04 ஆம் பக்கம் பார்க்க

## வடகிழக்கு போரை நிறுத்துங்கள் அமைச்சர்கள் மத்தியில் கவிரத்னா

"வடக்கிலும் கிழக்கில் மரணங்கள் தொடர்ந்துகொண்டிருக்கும் போது நாம் இங்கு தமிழ் சாஹித்திய விழா எடுக்கின்றோம். வடக்கு கிழக்கு மக்கள் அநியாயமாக பலியாவதைத் தடுக்க இந்த மேடையில் உள்ள அமைச்சர்களும் அரசியல் வாதிகளும் நடவடிக்கை எடுங்கள்"

இவ்வாறு நேற்று முன்தினம் — 04 ஆம் பக்கப் பார்க்க

## கீரிமலையில் சிலரை வியாழன் முதல் காணவில்லை

கீரிமலையைச் சேர்ந்த சிலர் கடந்த வியாழக்கிழமை இங்கு இராணுவம் வந்த போது அகப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

கீரிமலை யாழ்ப்பிறைப்பகுதியைச் சேர்ந்த சாணையர் சிவனேசம் (அன்ரி), மகாலிங்கம் கூவிளைச் சேர்ந்த நாதன் (விமல்) எல்லுப்போலை ஆகியோரே இவ்வாறு காணாமல் போனவர்களாவர்.

இராணுவம் வந்த போது இவர்கள் வீட்டில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது (48)

## வட்டு. வாகன விபத்தில் ஒரே குடும்பத்தில் 4 பேர் பலி

நேற்று மாலை கல்லுண்டாய் வெளிக்கும் வட்டுக் கோட்டைச் சந்திக்கும் இடையில் இடம் பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஐவர் ஸ்தலத்தில் பலியானார்கள்.

மாலை ஆட்டோ ஒன்றில் வந்து கொண்டிருந்த போது வாகனம் ஒன்றுடன் மோதி — 04 ஆம் பக்கம் பார்க்க

## ஐ. தே. க காரியாலயம் நுவரெலியாவில் தீக்கிரை

நுவரெலியாவில் உள்ள ஐக்கிய தேசிய கட்சிக் காரியாலயம் இனம் தெரியாதவர்களி...

செயற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு...

'டிக்கற்' கிடைக்காத சிலர் இதனைச் செய்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது...

## கீரிமலையில் இரு சடலங்கள்

கீரிமலை ...

விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஐவர்

வாகனம் ஒன்றுடன் மோதி

— 04 ஆம் பக்கம் பார்க்க

## அ.தி.மு.க - காங்கிரஸ் கட்சிகள் தொகுதி உடன்பாடு கண்டன

எதிர்வரும் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சியின ருக்கும் அ. தி. மு. கவிற்கும் இடையில் தொகுதி உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இத்தகவலை நேற்று சென்னையில் காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி அறிவித்தார். பாராளுமன்ற ஆசனங்களுக்காக 39 இடங்களில் 28 இடங்கள் இந்திரா காங்கிரசுக்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வடபகுதி இளைஞர்கள் குவைத்தில் மீண்டும் வேலை

வடபகுதி இளைஞர்கள் சிலர் குவைத் நாட்டில் மீண்டும் பணியுரிந்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குவைத் நாட்டில் நடைபெற்ற யுத்த நடவடிக்கையின் போது மேற்படி இளைஞர்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்ததாகவும் தற்போது நாடு சீரடைந்ததை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை குடாநாட்டில் நடைபெற்றது

5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை (விசேட) நேற்று திட்டமிட்டபடி குடா நாட்டில் நடைபெற்றது.

98 நிலயங்களில் நடைபெற்ற இப்பரீட்சைக்கு 80 வீதத்திற் மேற்பட்ட மாணவர்கள் தோற்றியதாக கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்தவலிவடக்கு,

— 4 ஆம் பக்கம் பார்க்க

நுவரெலியாவில் உள்ள ஐக்கிய தேசிய கட்சிக் காரியாலயம் இனம் தெரியாதவர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை அதிகாலை இடம் பெற்ற இச் சம்பவத்தில் அங்கு இருந்த ஆவணங்கள், உபகரணங்கள், தட்டச்சு யந்திரங்கள் என்பன எரிந்து நாசமாகின.

முன்னாள் அமைச்சர் காமினி திஸ நாயக்காவின் இணைப்பதிகாரி ஒருவர் இதற்கு பொறுப்பாக இருந்து செயற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு 'டிக்கற்' கிடைக்காத சிலர் இதனைச் செய்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

## நிர்வாக சேவை பரீட்சை 60 தமிழர் தெரிவாகினர்

முதற் தடவையாக இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் 60 தமிழர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் நேற்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது.

அரசாங்க சேவையில் உள்ளோருக்கான நிர்வாகச் சேவை பரீட்சையில் கே. கேதீஸ்வரன் (யாழ்ப்பாணம்) எஸ் இந்துமதி (கிளிநொச்சி)

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கீரிமலையில் இரு சடலங்கள்

கீரிமலை நகுலேஸ்வரம் தாண்டிக்குளம் புனித அன்னம்மாள் ஆலயத்திற்கு அருகே இரு சடலங்கள் காணப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன,

கடந்த வியாழன் இங்கு இராணுவத்துக்கும் புலிகளுக்கும் இடையில் சண்டை மூண்ட போது அகப்பட்ட போதுமக்களாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது. (48)

# கஜுவத்தையில் கடும் தாக்குதல்

# 24 படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு

நேற்று அதிகாலை 5 30 மணியளவில் மன்னார் மாவட்டத்தில் கஜுவத்தை முகாமில் இருந்து காட்டுப்பகுதியாக வேப்பங்குளம் வந்த இராணுவம்மீது விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்து பெரும் தாக்குதலை நடாத்தினர்.

நண்பகல் 12 மணிவரை நடைபெற்ற இம்மோதலில் 24 இராணுவத்தினரின் சடலங்களை விடுதலைப்புலிகள் கண்டுள்ளனர், எனினும் இதைவிட கூடுதலான உயிர்ச் சேதம் படையினருக்கு ஏற்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது

இம்மோதலில் ஜான், பைமன், ரவி, கண்ணன், துஷான், பொஸ்கோ ஆகியோர் உட்பட 11போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்

இம்மோதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்:

□ ஜிபிஎம்ஜி எல் எம் ஜி- 5

— 04 ஆம் பக்கம் பார்க்க

# வீட்டுச்சூழல் அபிவிருத்திப் போட்டி

## சிறுபோகம் - 1991

## கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கமாகவும் எமது மாவட்டத்தில் வாழும் மக்களின் வீட்டுச் சூழலின் அபிவிருத்தியை, பராமரிப்பை ஊக்குவிக்கவும், எம்மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதோடு போஷாக்கு உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டும் மேற்படி போட்டியை எமது மாவட்டத்தில் நடாத்தி பெறுமதி வாய்ந்த பரிசில்களை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் எவரும் பங்குபற்றலாம். நிபந்தனைகள் வருமாறு.

### அ. விண்ணப்பம்

1. முடிவுத் திகதி: 20. 04. 1991 சனிக்கிழமை
2. அனுப்ப வேண்டிய முகவரி:
செயலாளர், பகுதி உற்பத்திக் குழு

குறிப்பு:
விண்ணப்பப்படிவம் ஏதுமில்லை. விண்ணப்பதாரிகள் சாதாரண தாளில் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கலாம் போட்டி நிபந்தனைகளுக்குக்கட்டுப்படுவதாகவும், போட்டியை ஒழுங்கு செய்வோர் எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதாகவும் விண்ணப்பத்தில் பிரகடனம் செய்ய வேண்டும் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் பின்வரும் அம்சங்களை 'தனது வீட்டுச் சூழலில் ஏற்படுத்தி மதிப்பீட்டிற்கு இடம் கொடுக்க வேண்டும்.

### 1. பயிர்கள்

| | | |
|---|---|---|
| பருப்புவகை:- | குறைந்தது ஒரு பரப்பில் - பாசிப்பயறு செய்கை பண்ணுவது விரும்பத்தக்கது. | |
| மரக்கறிவகை:- | ஒரு இலை மரக்கறி உட்பட ஏதேனும் நான்கு உள்ளூர் மரக்கறிப் பயிர்கள். ஒருபயிரின்குறைந்தபரப்பளவு 15'X10' | |
| கிழங்கு வகை:- | மரவள்ளி / வற்றாளை குறைந்தது 30 சதுர அடி. | |
| பழமரம்:- | பப்பாசி | 3 — 5 மரங்கள். |
| | வாழை | 2 — 3 நிலையங்கள் |
| பிறபயனுள்ள மரங்கள்: | எலுமிச்சை | — குறைந்தது 1 |
| | முருங்கை | — " 1 |
| | அகத்தி | — " 1 |
| | இப்பில்இப்பில் | — " 3 |
| தளபாடங்களுக்குரிய மரம்: | வேம்பு, தேக்குவேலியோரமாக. | |
| வேறு பொருளாதார — முக்கியத்துவமான மரங்கள் | தென்னை - குறைந்தது 03 பனை (வேலியில்) குறைந்தது - 5 சமுகு - 3 | |

### 2. கூட்டெரு தயாரிப்பு:

குவியல் / குழி - 15' × 8' (குறைந்தது ஒன்று)


### 3. மாடு / ஆடு / கோழி வளர்ப்பு:

குடும்ப அங்கத்தவர்களுடைய தேவையையேனும் பூர்த்தி செய்யக் கூடிய முயற்சியாக இருக்க வேண்டும்.

குறிப்பு:- பொருத்தமான உறைவிடம் இருத்தல் அவசியம்.

இ. போட்டிகள் பின்வரும் மட்டங்களில்

# வீரவணக்கம்



## கப்டன் அப்பன்

(சிறீதரன்)

(கைதடி நாவற்குழி வட்டப் பொறுப்பாளர்)

| தமிழீழ மண்ணில் : | வீரமரணம் : |
|---|---|
| 30 . 11 . 1972 | 21 . 3 . 1991 |

"பாய்ந்தாய் கரும் புலியாக
பகைவரின் முகாம் தகர்க்க
பசுமையான இன்னுயிரை
ஈந்தாய் களத்தில்"

21. 3. 91 அன்று மன்னார் சிலாபத்துறை ஸ்ரீலங்கா முகாம் தகர்ப்பின்போது இவர் வீரமரணமடைந்தார். இவருக்கு எமது வீரவணக்கம்.

கைதடி, நாவற்குழி
பிரதேச மக்கள்

03142

மில்க்வைற் திரவ சவர்க்காரம்

சகல தேவை அழுக்கு நீக்கி

MILK WHITE LIQUID SOAP

All Purpose Dirt Remover

சாதாரண வீட்டுச் சலவைக்குப் பாவிக்கும் முறை

1. ஒரு லீற்றர் நீரில் பத்து மேசைக்கரண்டி மில்க் வைற் திரவ சவர்க்காரத்தை ஊற்றவும்.
2. நுரை செறிந்திட நீரைக் கலக்கவும்.
3. கலவையுள் ஈரத் துணியை அமிழ்த்திக் கலவை துணியில் செறியச் செய்யவும்.
4. பக்கமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்றாக

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு; மோசடியைத் தடுக்கச் சட்டத்தில் திருத்தம்

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுச் செல்வோரை பாதுகாப்பதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்வோர் தொழில் முகவர்களாலும், தொழில் வழங்குநர்களாலும் ஏமாற்றப்படாமலிருக்க இச் சட்டத்திருத்தம் உதவும் எனவும், ஏப்ரல் இறுதிக்கிடையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுவிடும்எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (74)

# பொலிஸ் கூண்டுக்கு அருகே கூட்டுறவுச் சங்கம் அமையும்

நாட்டிலுள்ள ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் திறக்கப்படவுள்ளன.

அடுத்த மாதம் முதல் சகல பொலிஸ் நிலையங்களிலும் கூட்டுறவு சங்கங்கள் இயங்கும்.

பொலிஸாரின் குடும்பங்களுக்குத் தேவையான உணவு, மற்றும் அத்தியாவசியபொருள்களை துரிதமாக வழங்கும் பொருட்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்

## இவ்வருடமும் வழமையான போட்டி

யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் வழமைபோல் இவ்வருடமும் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடரின் ஆரம்பத்தில் 7 வீரர்கள் பங்குபற்றும் 12 ஓவர்கட்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் ஆட்டம் ஆண்களுக்கான ஓவர் வேம் கரப்பந்தாட்டம் ஆகியன நடைபெற உள்ளன.

பங்குபற்ற விரும்பும் யாழ் மாநகர சனசமூக நிலையங்களின் சமாசத்தில் பதிவு செய்யப்பட்ட நிலையங்கள் உரிய முறையில் ஏப்ரல் 15-ம் திகதிக்கு முன்பதாக சமாச விளையாட்டுக் குழுச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகின்றனர். (16)

## அடர்ந்த காட்டில் 4ஜே.வி.பியினர் பலி

அடர்ந்த காட்டிலுள்ள ஜே. வி. பி. முகாம் முற்றுகையின்போது நால்வர் சுட்டுக் கொலை. மற்றும் பலர் காயம். பெருமளவு ஆயுதமும் மீட்கப்பட்டதாக பொலிஸ் கூறுகின்றது.

எம்பிலிப்பிட்டிய பகுதி கினிகல் கொடகந்த காட்டில் ஜே. வி. பி யினருடன் பொலிஸ் கோஷ்டி ஒன்று நடத்திய சண்டையிலேயே நான்கு தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது. (11)

## புதிய மருந்து கண்டுபிடிப்பு

'யானைக் கால்' நோயை இலகுவில் கண்டறியக் கூடிய புதிய எளிதான அன்டிஜன் ஒன்றைத் தாக்குடியில் உள்ள ஊல்லாடி மருந்துப் பொருள்கள் நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

இதுவரைகாலமும் யானைக் கால் நோய் இருப்பதைக் கண்டுபிடிப்பதற்கான பரிசோதனையை இரவில் மட்டுமே மேற்கொள்ளக் கூடியதாக விருந்தது.

ஆனால் இப்புதிய மருந்தின் மூலம் பகலிலும் மிக எளிதாக இப்பரிசோதனையைக் கண்டறிய முடியும்.

## 'அனைத்தும் அவரே இன்று மேடையில்

யாழ் திருமறைக் கலாமன்றத்தினரின் 'அனைத்தும் அவரே' என்ற நாட்டுக் கூத்து, இன்று 31 ஆம் திகதி, யாழ் திருமறைக்கலா மன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது. (16-52)

## சிறு விளம்பரம்

சேவை

புளொக் (Block) புகைப்படம், றபர் சீல், கலர் படம், ஓவியம், பிறேம் போடுதல், கலர் பிலிம் சுருள்கள், ஸ்ரிக்கேஸ் முதலியவற்றிற்கு நாடுங்கள்; கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்.

03134

வலைப்பாடு இறங்கு துறைக்கு கப்பல்

இ. போட்டிகள் பின்வரும் மட்டங்களில் மத்தியஸ்தம் செய்யப்படும்.

| மட்டம் | முடிவுத் திகதி |
|---|---|
| 1. உற்பத்திக்குழு மட்டம் | 15 05 1991 |
| 2. பெரும்பாகக் குழு மட்டம் | 20. 05. 1991 |
| 3 உப மாவட்டக் குழு மட்டம் | 30 05 1991 |
| 4. மாவட்டக் குழு மட்டம் | 10. 06. 1991 |

ஈ. பரிசில்கள் :

குறிப்பு : 1. பணமாக / பொருள்களாக வழங்கப்படும்.

2. பின்வரும் தொகைகளுக்குக் குறையாத பெறுமதியுள்ள பரிசில்கள் வழங்கப்படும்.

| மட்டம் | பெறுமதி | | |
|---|---|---|---|
| | 1 - ம் இடம் | 2 - ம் இடம் | 3 - ம் இடம் |
| | ரூபா | ரூபா | ரூபா |
| 1. பெரும்பாகம் | 2, 000 | 1, 500 | 1, 000 |
| 2. உபமாவட்டம் | 3, 000 | 2, 000 | 1, 500 |
| 3. மாவட்டம் | 5, 000 | 3, 000 | 2, 000 |

எமது இம்முயற்சியில் பெருமளவில் பங்கு கொண்டு எமது மாவட்ட வளர்ச்சிக்கு உதவுமாறு எமது மாவட்ட மக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கா. மாணிக்கவாசகர்

அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்.
கிளிநொச்சி மாவட்டம்.

செயலகம்
கிளிநொச்சி.
21. 03. 1991.

03137

துணியைச் செறிவச் செய்யவும்.

4. பத்து நிமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்றாக அலசி எடுக்கவும்.

5. சலவை செய்யும் துணிகளின் எண்ணிக்கைக்கேற்ப பொலிவிற்கும் ஏற்ப அளவில் மாற்றஞ் செய்யவும்

சகல ப. நோ. கூ. சங்கங்களிலும், கடைகளிலும், மில்க்வைற் விற்பனையாகிறது.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்**

03135

உ

ஓம் சிவம்

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

## கிளிநொச்சி இந்து மகா வித்தியாலய இந்து மாமன்றம் நடாத்தும்

# 'சிந்தனைத் தேன்துளிகள்'

## நூல் வெளியீட்டு விழா

இடம்: பாடசாலை மண்டபம்

காலம்: 01-04-1991 திங்கள் பி.ப. 3.00மணி

03140

வலைப்பாடு இறங்கு துறைக்கு கப்பல் மூலம் வரும் உணவுப் பொருட்களை இறக்கல் ஒப்பந்த வேலைக்கான

# கேள்வி கோருதல்

I கூலி ஆட்கள் !

கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவதற்கும் அவற்றை களஞ்சியப்படுத்தும் வகையில் லொறிக்கு ஏற்றுவதற்கும், 120 கூலி ஆட்கள் தேவை சங்க எல்லைப் பரபபில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

II இழுவைப்படகுகள் !

வலைப்பாடு இறங்கு துறையில் இருந்து 5 மைலுக்கு உட்பட்ட தூரத்தில் நிற்கும் கப்பலில இருந்து உணவுப் பொருள்களை ''பாஜ்'' மூலம் இழுத்து வருவதற்கான சக்தி வாய்ந்த இழுவைப்படகுகள் 03 (மூன்று) வாடகைக்கு தேவை.

III மேற்படி சேவைகளை வழங்கக் கூடியவர்கள் மேல் விவரங்களுக்கு பொதுமுகாமையாளர் பூநகரி ப நோ. கூ. சங்கம் என்ற முகவரிக்கு 7. 4 91 க்கு முன் நேரில் தொடர்பு கொண்டு தங்களுக்கான கேள்விகளை சமர்ப்பிக்கவும்.

பூநகரி ப. நோ. கூ. சங்கம்
பதிவு இல : - 48
12 2. 72
பூநகரி.

இங்ஙனம்
கூட்டுறவுச் சேவையாளர்
ந. பாலசுப்பிரமணியம்
பொதுமுகாமையாளர்

03139

# புதிய எழுதுவினைஞர் ஆட்சேர்ப்பில் தமிழர் புறக்கணிப்பு! விகிதாசாரத்திற்கு மேலாக சிங்களவருக்கு நியமனம்!!

புதிதாக அரசாங்க சேவைக்கு எழுதுவினைஞர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நவம்பரில் இடம்பெற்ற போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தற்பொழுது வழங்கப்பட்டுள்ள நியமனத்தில் அரசு முன்னர் அறிவித்த விகிதாசார அடிப்படையிலும் குறைந்த அளவிலேயே தமிழர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் விகிதாசார நியமன அறிவிப்பின் பிரகாரம் 73.95 சதவீதம் சிங்களவர்களுக்கும், 12.70 வீதம் இலங்கைத் தமிழருக்கும், 5 52 வீதம் இந்தியத் தமிழரும் இந்தப் புதிய நியமனத்திற்கு சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இந்த எழுதுவினைஞர் நியமனத்தில் சிங்களவர்களுக்கு 81.47 வீதம் வழங்கப்பட்டுள்ள அதேவேளை இலங்கைத் தமிழர்களுக்கு 12 3 சதவீதமும், இந்தியத் தமிழர்களுக்கு 0.23 வீதமும் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையினால் இப்புதிய எழுதுவினைஞர் நியமனத்தில் 7.52 வீத சிங்களவர்கள் விகிதாசார முறைமைக்கு மேலாக சேர்க்கப்பட்டுள்ளதுடன், 0.40 வீத இலங்கைத் தமிழரும், 5 35 வீத இந்தியத் தமிழரும் குறைவாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

புதிய விகிதாசார நியமனத்தில் தமிழர்களுக்குப் போதிய நியமனம் கிடையாது போய்விடும் எனத் தெரிவிக்கப்பட்டு வருகின்ற அதேவேளை, இந்த எழுதுவினைஞர் நியமனத்தில் அரசு குறிப்பிட்ட வீதத்தை விட மிகக் குறைவான வீதத்திலேயே தமிழர்கள் சேர்க்கப்பட்டுள்ளமை பற்றியும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் முக்கிய 94 திணைக்களங்களுக்கு இந்தப் போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் எந்தவொரு தமிழரும் நியமிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## செங்கையாழியானின் 'குவேனி' வெளியீட்டு விழா

தமிழ்த்தாய் பதிப்பகத்தினரால் வெளியிடப்படும் செங்கையாழியானின் 'குவேனி' நூல் வெளியீட்டு விழா முதலாம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வளவை வளவன் தலைமையில் யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

வெளியீட்டுரையை ரவியும், கருத்துரைகளை பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி சோ. கிருஷ்ணராசா, ஆகியோரும் நிகழ்த்துகின்றனர்.

முதல் 500 பிரதிகளை யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா பெற்றுக் கொள்வார்.

## 'ஓய்வூதிய முற்பணம்' வழங்குமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து ஓய்வூதியம் பெறுவோருக்கும் தமிழ் புதுவருடத்தை முன்னிட்டு ஓய்வூதிய முற்பணம் ஒன்றை வழங்குமாறு யாழ் அரச அதிபரை நல்லூர் ஓய்வூதியர் சங்கம் கேட்டுள்ளது.

'யாழ் மாவட்டத்தில் சகல அரச ஊழியர்களுக்கும் மார்ச் மாதம் வரையிலான சம்பளம் வழங்கப்பட்டு விட்டது. ஆனால் ஓய்வூதியக்காரர்களுக்கு இன்னும் ஜனவரி மாத ஓய்வூதியம் கூட முழுமையாக வழங்கப்படவில்லை.'

'இதனால் ஓய்வூதியக்காரர்களுக்கு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் மார்ச் மாதம் வரையிலான ஓய்வூதியக் கொடுப்பனவை வழங்க வேண்டும். அது முடியாத விடத்துப் புதுவருடத்தை முன்னிட்டு அவர்களுக்கு, அவர்கள் ஓய்வூதியம் பெறும் வங்கிகள் மூலமாக விசேட ஓய்வூதிய முற்பணத்தை வழங்க அரச அதிபர் தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி உதவ வேண்டும்' என ஓய்வூதியர் சங்கம் கோரியுள்ளது. (66)

## இந்திய மக்கள் அவைத்தேர்தல்; எம்.பி.ஒருவரை தெரிய 60 லட்சம் செலவு

நடைபெற இருக்கும் இந்திய மக்கள் சபைத்தேர்தலின் போது ஆகக்குறைந்தது ஆயிரம் கோடி ரூபா வரை செலவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

10 வது மக்கள் அவைக்கு இந்தியா முழுவதும் 500க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் தேர்தல் இது

அங்கு ஒரு எம் பியைத் தேர்ந்தெடுக்க 50 லட்சம் ரூபா முதல் 60 லட்சம்ரூபாவரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது

## கணக்காளர் தெரிவிலும் புறக்கணிப்பு 64 பேரில் அறுவர்மட்டுமே தமிழர்

கணக்காளர்கள் தெரிவில் தமிழர்கள் பலவருடங்களாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றமை அம்பலத்திற்கு வந்துள்ளது.

1989 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட அரசாங்கக் கணக்காளர் சேவைகளுக்கான பரீட்சைக்குத் தோற்றியோரில் 6 தமிழர்கள் மட்டுமே இப்போது கணக்காளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் எனத் தெரியவந்துள்ளது.

இன விகிதாசார அடிப்படையில் நடைபெற்ற இத்தெரிவின்போது 56 சிங்களவர்களும், 2 முஸ்லிம்களும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப-10)

## பழைய பத்திரிகை எடுத்துவரவும் நயினையில் கடற்படை தடை

நயினாதீவிலிருந்து பழைய பத்திரிகைகளை குறிகாட்டுவானுக்குபடகில்எடுத்து வந்த கடை சிப்பந்தி ஒருவர் நயினாதீவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, பலத்த தாக்குதலின் பின் விடுவிக்கப் பட்டுள்ளார்.

நயினாதீவுக்கு யாழ் நகரிலிருந்து செய்திப்பத்திரிகைகளை எடுத்துச் செல்வதற்கு கடந்த பல மாதங்களாக தடைவிதிக்கப் பட்டிருக்கையில், இப்பழைய பத்திரிகைகள் நயினாதீவுக்கு எப்படி வந்தன எனக் கேட்டே இந்த சிப்பந்தி தாக்கப்பட்டாராம். (20)

## கொழும்பில் வடபகுதி யுவதிகள் புகைத்தலுக்கு அடிமையாகிறார்கள்

கொழும்பில் விடுதிகளில் தங்கியுள்ள வடபகுதி யுவதிகள் தற்பொழுது புகைத்தல் பழக்கத்திற்கும் அடிமையாகி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெளிநாடு போவதற்காகவும், வெளிநாடுகளிலுள்ள தமது உறவினர் மற்றும் காதலர்களுடனும் தொலைபேசியில் தொடர்பு கொள்வதற்காகவும் கொழும்பு வரும் வடபகுதி யுவதிகளில் பலருக்குத் தற்போது கொழும்பு வாழ்க்கை நன்கு பிடித்துவிட்டதாம்.

விடுதிகளில் தங்கும் இவர்கள் அங்கு ஏற்கனவே பல மாதமாகத் தங்கியுள்ள இவர்களின் தோழிகளின் வழிநடத்தலில் புகைத்தலில் இவர்கள் 'இன்பம்' காண்கின்றனராம். (23)

## அதிரடிப்படையினரை கிழக்கிலிருந்து அகற்றக்கூடாதென்கிறார் அஷ்ரப்

கிழக்கு மாகாணத்தில் இருந்து விசேட அதிரடிப் படையினரை வாபஸ்பெற வேண்டாமென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம் அஷ்ரப் ஜனாதிபதியிடம் கோரியுள்ளதாகக் கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அதிரடிப்படையினர் தொடர்ந்தும் நிலைகொண்டிருப்பதையே முஸ்லிம்கள் விரும்புகின்றார்கள், முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு வழங்க அதிரடிப்படையினர் தொடர்ந்தும் இருப்பது அவசியம் எனவும் அஷ்ரப் கேட்டுள்ளார்.

## 6 மாதம் கெடாமல் இருக்கும் புதிய 'திரிசூலி' கத்தரி இனம் கண்டுபிடிப்பு

'திரிசூலி' என்னும் புதிய இனக் கத்தரிச்செடியை வடமராட்சி விவசாயி ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

சுண்டங்கத்தரி, வட்டுக்கத்தரி, நாட்டுக்கத்தரி ஆகிய மூன்று கத்தரி விதைகளை இணைத்து இந்தப் புதிய இனம் உருவாக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி துன்னாலையைச் சேர்ந்த 'விவசாய மன்னன்' ஆறுமுகம் மகாலிங்கம் என்பவரே இந்த விவசாயியாவார்.

## பல்கலைக்கழகத்தில் மெய்யியல் விரிவுரை

யாழ் பல்கலைக்கழக மெய்யியல் வட்டத்தின் ஆதரவில் பல்கலைக்கழக தொல்பொருள் ஆராய்ச்சி மண்டபத்தில் ஏப்ரல் மாதம் நான்காம் திகதி பிற்பகல் 3 மணிக்கு 'சைவ சித்தாந்தத்தில் சுயாதீன சித்தம்' என்னும் பொருள் பற்றிய கலந்துரையாடலும், விரிவுரையும் இடம் பெறவுள்ளன.

## FIRST IN ARTS 1989 / 1990 / 1991

| DATE | SUBJECTS Morning / Afternoon | | INDEX NO | CENTRE |
|---|---|---|---|---|
| 91-04-18 | History | I&II | All Candidates | Isipathana M. V. |
| | French | I&II | | |
| | Sanskrit | I&II | | |
| | Applied Mathematics | | | |
| 91-04-19 | History | III&IV | ,, | ,, |
| | Hindi | I&II | | |
| 91-04-20 | English | I&II | ,, | ,, |
| | Pali | I&II | | |
| 91-04-21 | Tamil | I&II | ,, | ,, |
| | Buddhist Philosophy | I&II | ,, | ,, |
| | Arabic | I&II | ,, | ,, |
| 91-04-22 | Philosophy | I&II | Tamil | Lumbini M. V. |

வடமராட்சி துன்னாலையைச் சேர்ந்த 'விவசாய மன்னன்' ஆறுமுகம் மகாலிங்கம் என்பவரே இந்த விவசாயியாவார்.

பிஞ்சாக இருக்கும் போது இளம் சிவப்பாகவும், ஓரளவு முற்றியபோது நாவல்நிறம் கலந்த கடும் பச்சையாகவும், முற்றிய பழமானபோது கடும் மஞ்சளாகவும் இக்கத்தரி காட்சியளிக்கின்றது.

ஆறு வருடங்கள் கொண்ட செடியில் காய்த்துள்ள இந்தக் கத்தரிக்காய் சுமார் ஆறுமாதமாகிய பின்பும் கெடாமல் உள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

அத்தோடு எவ்வித பூச்சிகளோ, புழுக்களோ இப்புதிய இனச் செடியினைத் தாக்குவதில்லையென்றும் நவம்பர், டிசம்பர் காலங்களில் பெருமளவு காய்களைப் பெறமுடிவதாகவும் குறித்த விவசாயி தெரிவித்தார்.

(39)

யாடலும், விரிவிரையும் இடம் பெறவுள்ளன.

மெய்யியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா. ஞானக்குமரன் இவ் விரிவுரையை நிகழ்த்துவார்.

## மூன்று கால்களுடன்..

மூன்று கால்களுடன் கோழிக்குஞ்சு பொரித்துள்ளது அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த சின்னையா தருமராசா என்பவரது வீட்டிலேயே இந்த அதிசயக்குஞ்சு பொரித்துள்ளது.

# 'தாகம் தணியகம்', 'குளிர்களிநிலையம்', 'படமாடம்'

# தூய தமிழ்ப்பதங்கள் நடைமுறைக்கு வருகின்றன

முத்தமிழ் விழாவினை முன்னிட்டு பெயர்ப்பலகைகளிலுள்ள ஆங்கில மற்றும் பிற மொழிப் பதங்களுக்குப் பதிலாக தூய தமிழ்ப் பதங்களைப் பொறிப்பதில் வடபகுதி வர்த்தகர்கள் போட்டி போட்டுக் கொண்டு செயற்பட்டு வருவதாக எமது நிருபர்கள் அறிவிக்கிறார்கள்.

பல இடங்களிலும் உள்ள விளம்பரப்பலகைகளில் தூயதமிழ்ப்பதங்க்ள் பொறிக்கப்பட்டுள்ளதை தற்பொழுது அவதானிக்க முடிகின்றது.

சில இடங்களில் 'கூல்பார்' என்ற பதத்திற்குப் பதிலாக 'குளிர்பான விற்பனை நிலையம்', 'தாகம் தணியகம்', என்ற தமிழ்ப்பதங்களும், 'பிக்சர் பலஸ்' என்ற ஆங்கில பதத்திற்குப் பதிலாக 'படமாடம்', 'படச்சட்டகப் பொருத்து நிலையம்' என்ற பதங்களும், 'ஐஸ் கிறீம் ஹவுஸ்' என்ற ஆங்கிலப் பதத்திற்குப் பதிலாக 'குளிர் களி விற்பனை நிலையம்' என்ற பதமும், 'பொடி பில்டேர்ஸ்' என்ற பதத்திற்குப் பதிலாக 'வாகன உடற் கூறு பொருத்துநர்' என்ற தமிழ்ப் பதமும்' 'எலக்ரோனிக்ஸ் சென்ரர்' என்பதற்கு 'மின்னணுவியல் நுகர் பொருள் நிலையம்' என்ற பதமும் புதிதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

(16,34,66)

| | | | | |
|---|---|---|---|---|
| | Arabic | I&II | | |
| 91-04-22 | Philosophy | I&II | Tamil | Lumbini M. V. |
| 91-04-23 | Geography | I&II | ,, | ,, |
| | West Class Culture | I&II | All Candidates | ,, |
| 91-04-24 | Sociology | I&II | Sinhala & English | Susamaywardena M.V. |
| 91-04-25 | Pure Mathematics | I&II | All Candidates | Anuruddha M. V. |
| 91-04-25 | Hindu Culture | I&II | Tamil | Gothami B. V. |
| | Index Nos | (2751-3700) | ,, | Susamaywardena M. V. |
| | ,, ,, | (25001.26000) | | Anuruddha B. V. |
| | ,, ,, | (26001-26100) | ,, | |
| 91-04-26 | Political Science | Eng. & Tamil I&II | | Anuruddha B. V |
| 91-04-27 | Economics | I&II | Tamil | Susamyawardena M. V |
| 91-04-29 | Sinhalese | I&II | Tamil | ,, |
| 91-04-30 | Geography (04Hours) | III | Tamil | ,, |


**Isipathana Maha Vidyalaya**
ISIPATHANA MAWATHA
Havelock Town, Colombo-05

**Lumbini Maha Vidyalaya**
HAVELOCK TOWN
Colombo -05

# பட்டப்படிப்புக் கல்லூரி

**14/8 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

03141

# உயிர்ப்பில் பிறக்கும் உண்மைகள்

– சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

பிறக்கின்றவர் எல்லோரும் இறப்பது வாழ்க்கையின் நியதி. இறப்புக்களிலும் பல ரகங்கள் உண்டு. சிலர் பழுத்த முதுமையில் இறக்கிறார்கள். வேறு சிலர் இளமையில் மரிக்கின்றார்கள். சிலர் நோய் நொடிகளாலும், போர், விபத்துக்களாலும் உயிர் இழக்கிறார்கள் சிலர் கொல்லப்படுகின்றனர். யேசு கொல்லப்பட்டார் என்பதிலும் பார்க்க; கொலை செய்யப்படத் தன்னை மனமுவந்து கையளித்தார் என்பது மிகப் பொருத்தம். ''என் உயிரை என்னிடமிருந்து பறிப்பவர் எவருமில்லை. நானாகவே என் உயிரைக் கையளிக்கின்றேன்.'' என்றார் யேசு.

யேசுவின் விசேட அன்புக்கு உரிமையுடைய பன்னிரு சீடரில் ஒருவனால் காட்டிக் கொடுக்கப்பட்டு, மதத் தலைவர்களாலேயே பழி சுமத்தப்பட்டு, அவரிடமிருந்து பல நன்மைகள் பெற்ற பாமரமக்களாலேயே சிலுவையில் அறைய அந்நியரிடம் கையளிக்கப்பட்டார் தம்சொந்த இனத்தின்(யூத இனத்தின்) மக்களே அந்நியரான (உரோமை) அதிகாரிகளுக்கு அரசியல் குற்றவாளியென அவரைக் காட்டிக் கொடுத்தனர். புரட்சிக்காரன், கலகக்காரன், தேவதூஷணம் பேசுபவன் எனப் பழி சுமத்தி அடக்கி விட்டனர் யூத இனத்தவர்.

உயிரைப் பறித்துக் கல்லறைக்குள் யேசுவுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டனர் என நிம்மதி கொண்டனர் அநீதியின் பிரதிநிதிகள். தென்றலாக வந்த தெய்வத்தைத் தீயாக நினைத்து அணைத்து விட்டதாக இறுமாப்புக் கொண்டனர் படைவீரர்கள். ஆத்மாக்களைத் தேடி மீட்பின் ராகங்களை இசைக்க வந்த வீணையின் நரம்புகளை அறுத்து விட்டோம் எனப் பகற்கனவு கண்டனர் கொடியவர்கள். கடுகுவிதை காரமாக இருக்கிறது என்று மண்ணிற்குள் புதைத்து விட அது முளைவிட்டுக் கொடியாகப் படர்ந்து நூற்றுக்கணக்கான கடுகு விதைகளைப் பிறப்பித்ததாம்.

உண்மையில் கொடிய மனிதர்கள் தங்களையே கல்லறைகளாக்கி விட்டனர். யேசு இறைவனின் அவதாரம் என்று காண முடியாத குருடராகி விட்டனர். சூரிய அஸ்தமனம் என்பது மறு உதயத்திற்கு ஓர் பதுக்கமே தவிர; சூரியன் மரணிப்பது கிடையாது.

உண்மை என்றும் உறங்குவது இல்லை. இறைவன் மரிப்பது இல்லை. கல்லறை மனித வாழ்வுக்கு முற்றுப்புள்ளியல்ல. இலட்சிய மனிதர் சாகடிக்கப்படும்போது பல உள்ளங்கள் அவர்கள் வாழும் கோவில்களாகின்றன.

கிறிஸ்து உயிர்த்து விட்டார் என்பதற்கு அவரது சீடர்கள் தம் உயிரைக் கூடப் பணயம் வைத்து உண்மை உயிர்ப்பை உறுதிப்படுத்தினர். கிறிஸ்து யேசு மீது கொண்ட தூய அன்பினால் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் துறந்து ஆயிரக்கணக்கானோர் மறையினது வேத சாட்சிகளாயினர்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு பிறப்பிக்கும் உண்மைகள் பல. யேசு கிறிஸ்து இறைமகன் என்பது இதனால் நிரூபிக்கப்படுகின்றது. அவரது போதனையும், சாதனையும் இணைந்த உயர்ந்த இலட்சியங்களான உண்மை, அன்பு, சகோதரத்துவம் அழிக்கப்படமுடியாத நிஜங்களாகின்றன. மனிதனது சதியும், சூழ்ச்சியும், அதிகாரமும், ஆக்கிரமிப்பும் அவனையே கல்லறையாக்கி விடுகின்றன.

அன்றாடம் நாம்படும் துன்பங்கள். பாடுகள், இழப்புக்கள் போன்றவை தியாகத்தின் எதிரொலி அவை யாவும் ஒரு சுதந்திர சமுதாயத்தினது பிரசவ வேதனைகளே தவிரத் தோல்விகள் அல்ல. ஒவ்வொரு மனிதனும் கல்லறைகளைக் கடந்த உயிர்ப்பு வாழ்வைத் தாயகமாகக் கொண்டு வாழ வேண்டும். உடல் கருகி மண்ணாகி விட்டாலும் அவர்கள் காத்த உயர்ந்த பண்புகள் கருகமுடியாத இலட்சியப் பூக்களே. அவை பல்லாயிரக்கணக்கான பரம்பரைகளையும் கடந்து மனித சமுதாயத்தை அலங்கரித்துக் கொண்டுதான் இருக்கும்.

★ ஜனாதிபதி ஆணைக்குழுவில் அரச சட்டத்தரணி தகவல்

# சில தொண்டர் நிறுவன அதிகாரிகளுக்கு மேலதிகமாக சம்பளம் வழங்கப்படுகிறது

இந்த நாட்டில் பதிவு செய்யப்படாது இயங்கும் இரண்டாயிரம் முதல் ஐயாயிரம் நிறுவனங்கள் தொடர்பாக நாம் விசாரணைகள் நடாத்தவுள்ளோம்.

இவ்வாறு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இயங்கி வரும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்து ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் தலைவரான முன்னாள் நீதியரசர் எஸ். வனசுந்தர இந்த விசாரணை ஆரம்பமானபோது தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர்;

''சில ஸ்தாபனங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து பணம் கிடைக்கின்றன. சில பொதுமக்களிடமிருந்து நிதியைத்திரட்டுகின்றன. சில ஸ்தாபனங்கள் பெரும் தொகையான பணத்தை பயன்படுத்துகின்றன. ஆனால் இவைகளின் பணக்கையாடல் சம்பந்தமாக எனக்குப் பல புகார்கள் வந்துள்ளன.

அதனால் குறிப்பிட்ட சில நிறுவனங்கள் மீது விசாரணை நடாத்தாது முழு நிறுவனங்கள் மீதும் விசாரணைகள் நடாத்தவுள்ளோம். புகார்கள் கிடைத்துள்ளவற்றில் சில சமூக நலப்பணிகளில் ஈடுபடுகின்றன. மற்றவை பலவகையான சமயங்கள் தொடர்பான நிறுவனங்களே.

நீதிமன்றங்கள் எவ்வாறு செயற்படுகின்றனவோ அதனைப்போலவே இங்கும் விசாரணைகள் நடைபெறும்'' என்றார் சிரேஷ்ட அரச சட்டத்தரணி நிஹால் ஜயசிங்க. தமது ஆரம்ப உரையில் கூறியதாவது, சில நிறுவனங்களின் அதிகாரிகள் மேலதிகமாக சம்பளம் பெறுவதாகவும், சில நிறுவனங்களின் அதிகாரிகள் அவசியமின்றி வெளிநாடுகள் செல்வதாகவும் எமக்குப்புகார்கள் வந்துள்ளன. சமய நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் குறித்தும் விசாரணை நடைபெறும் என்றார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் கூறுகின்றன

# நிவாரணங்கள் தடைப்பட்டாலும் மக்களைக் காப்பாற்றுவோம்

யாழ் மாவட்டங்களுக்கு அரசால் வழங்கப்படும் நிவாரண உதவிகள் தடைப்பட்டாலும் எமது உள்ளூர் வளங்களைப்பயன்படுத்தி இயன்ற வரை மக்களைக் காப்பாற்ற நாம் தயாராகவுள்ளோம்.

நேற்று நல்லூர் பல நோ. கூ. சங்கத்தில் இடம்பெற்ற சங்கத் தலைவர்கள் அரச இணைக்கள அதிகாரிகள் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தனர்.

யுத்தம் ஆரம்பித்தபோது முதல் கட்டமாக இடம் பெயர்ந்தவர்களுக்குரிய நிவாரணத்துக்கு சங்கங்களின் சொந்த இருப்பில் இருந்த பொருள்களே விநியோகிக்கப் பட்டன.

ஆனால் இதற்கான கொடுப்பனவுகள் எதுவுமே செயலகத்தில் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். (66)

### இலங்கை...

நாட்டின் பொருளாதாரம் இடம் கொடுக்குமா என்பது சந்தேகமே எனவும் அக்கூட்டுரையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது 12

### வடகிழக்கு...

கண்டியில் நடைபெற்ற தமிழ் சாஹித்திய விழாவில் கலந்து கொண்ட கலாசார இணையமைச்சர் பி. கவிரத்ன உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அங்கு மரணங்கள் தொடரும்போது நாம் இங்கு சாஹித்திய விழா எடுக்கிறோம்.

### களுவத்தையில் –

- ☐ கினிமினி எல் எம் ஜி மேலதிக சுடுகுழல் - 5
- ☐ 60 மி மி மோட்டார் -5
- ☐ 60 மி மி ஷெல் -32
- ☐ ஆர் பி ஜி - 2
- ☐ ஆர் பி ஜி ஷெல் - 19
- ☐ ஆர் பி ஜி புரொப்பலர் - 18
- ☐ 40 மி மி பிஸ்டல் - 1
- ☐ 40 மி மி பிஸ்டல் ஷெல் -12
- ☐ எப் என் சி ரக துப்பாக்கி - 16
- ☐ எப் என் சி மகஸின் - 92
- ☐ 5 56 ரவைகள் - 32, 500
- ☐ பராலைட் - 2
- ☐ 60 மி மி மோட்டார் பராலைட் ஷெல் - 2
- ☐ ஜே ஆர் கைக்குண்டு – 39
- ☐ புகைக்குண்டு - 6
- ☐ ரி என் ரி வெடிமருந்து [illegible]

# கிராமிய வங்கிகளால் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கமுடியாதுள்ளது

கிராமிய வங்கிகளால் வழங்கப்பட்டுவந்த யாழ் மாவட்ட ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவுகளை தொடர்ந்து வழங்க முடியாதுள்ளது என பல நோ. கூ. சங்கங்கள் அறிவித்துள்ளன.

பென்சனியர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான பணத்தை மக்கள் வங்கி கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்காதமையால் காசோலைகளையே கிராமிய வங்கிகள் வழங்கிவருவதாகவும் இதனால் இக்காசோலைகளை கமிசன் கொடுத்தே ஓய்வூதியர்கள் மாற்றும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சங்கத் தலைவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இதேவேளை அரச வங்கிகள் வாடிக்கையாளர்களு[illegible] திருப்திகரமாக பண[illegible] வழங்கி வருவதனால் [illegible] மக்கள் இராமிய வங்[illegible] சந்தேகக் கண்ணோ[illegible] பார்ப்பதாக கூட்டுற[illegible] டாரங்களில் கவலை [illegible] விக்கப்படுகிறது

# ஹிஸ்புல்லா மீது முஸ்லிம் காங்[illegible] ஒழுக்காற்று நடவடிக்கை- அ[illegible]

பதவி விலக மறுத்துவரும் மட்டக்களப்பு முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அதன் தலைவர் எம். எச். எம் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ்தொடர்பான எந்த விடயத்திலும் அவருடன் எவ்வித தொடர்புகளும் இருக்கக்கூடாது எனவும் அவர் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் இளைஞர்களுக்கும் அறிவித்துள்ளார்.

ஒழுக்காற்று நட[illegible] முடியும் வரை ஹிஸ்பு[illegible] முஸ்லிம் காங்கிரஸ் சார்[illegible] இயங்க முடியாது அவரது [illegible]சால்செயல் நடவடிக்கைகள் முஸ்லிம் காங்கிரஸினதாக கருதப்படலாகாது அவரின் நடவடிக்கைக்கு கட்சி எவ்வித பொறுப்பையும் ஏற்கமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஹிஸ்புல்லா கட்சி விதிகளை பகிரங்கமாக மீறியுள்ளார் என்றும் அஷ்ரப் குற்றம் சாட்டியுள்ளார்,

# முல்லை கிராமப்பகுதியில் யானைகள் அட்டகாசம்

முல்லைத்தீவில் கிராமப் புறங்களில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது.

யானைக்கூட்டங்கள் உடையார்கட்டு, விசுவமடு, ஒட்டுசுட்டான், தணுக்காய் முறிகண்டிப்பகுதிகளில் உள் குடிசைகளை சேதப்படுத்துவதோடு, பயன்தரும் மரங்களையும் அழித்து வருகிறது.

யானைகளின் தாக்குதலுக்கு சிலர் இலக்காகியும் வருகின்றனர். (38

# 15 லட். ரூபா தங்கம் கொள்வனவு

### வட்டு...

யதால் காரைநகரைச் சேர்ந்த 3 பெண்களும். ஒருவயோதிப

### நிர்வாக...

எஸ். இராசநாதப்பிள்ளை

வட்டு...

யதால் காரைநகரைச் சேர்ந்த 3 பெண்களும். ஒருவயோதிபரும், ஆட்டோ சாரதியும் இந்த விபத்தில் மரணமானார்கள்.

இதில் சாரதியான தர்மகுலசிங்கம் (தனம் 31) இனங்காணப்பட்டுள்ளார். (74)

நிர்வாக...

எவ். இராசநாதப்பிள்ளை (முல்லைத்தீவு, சிவஞானச்செல்வம் (யாழ்) ஆகிய வடபகுதியைச் சேர்ந்தோர் இறுதியடைந்துள்ளனர்.


வாடியடி, பூநகரியில்

மங்களகரமான திறப்புவிழா

1. 4. 91 திங்கள் (நாளை) காலை 7 மணிக்கு

எமது

விற்பனை நிலையம்

திறந்து வைக்கப்படவுள்ளது.

(எமது விற்பனை நிலையத்தில் "முரசொலி" உட்பட பத்திரிகைகள், சஞ்சிகைகள், மற்றும் பாடசாலை உபகரணங்கள் என்பன பெற்றுக்கொள்ளலாம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

- பொ. தங்கராசா

03143



இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி கலியங்காடு டச்சு வீதி, லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 31-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


தார்.

அங்கு மரணங்கள் தொடரும்போது நாம் இங்கு சாஹித்திய விழா எடுக்கிறோம். எல்லோரையும் வினயமாக கேட்கிறேன் வடக்குக் கிழக்கு போரை முடிவுக்கு கொண்டு வாருங்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு...

வெளியிட அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

ஒவ்வொன்றும் 3 அடி முதல் $3\frac{1}{2}$ அடி வரை நீளமுடையன இவை ஹெலிகப்டரிலிருந்து தரை நோக்கித் தாக்குவதற்கு பயன்படுத்தப்படுபவை. தரைப்போருக்குபாவிக்கப்படும் ஆட்லறி ஷெல் அல்ல என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

உணவு...

ஆரம்பிக்குமாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மானிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பல நோ. கூ. சங்கங்களுக்கு மீளாய்வு செய்யப்பட்ட பட்டியல்கள் இதுவரை கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (66)

பராலைட் ஷெல் - 2

- [ ] ஜே ஆர் கைக்குண்டு - 39
- [ ] புகைக்குண்டு - 6
- [ ] ரி என் ரி வெடி மருந்து - 4 கட்டிகள்

இதேவேளை நேற்று முன்தினம் மாலை சிலாவத்துறையில் விமானக் குண்டுவீச்சு நிகழ்ந்துள்ளது (71)

அ. தி. மு. க...

கும் 11 இடங்கள் அ தி மு.கவுக்கும் ஒதுக்கப்பட்டது. சட்டப்பேரவையின் 168 ஆசனங்கள் அ. தி. மு கவுக்கும் மிகுதி 66 ஆசனங்கள் காங்கிரசுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக சென்னை வந்த ராஜீவ் காந்தியை செல்வி. ஜெயலலிதா விமான நிலையம் சென்று வரவேற்றார்.

5ஆம்...

காரைநகர், ஊர்காவற்றுறைப் பகுதி மாணவர்களுக்கு ஏற்கனவே அந்தந்தக் கோட்டக் கல்வி அதிகாரிகளினால் மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப் பரீட்சையை நடாத்துவதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைத்த சகல துறையினருக்கும் அவர் நன்றி தெரிவித்தார். (70)

# 15 லட். ரூபா தங்கம் கொள்வனவு இரு தமிழ் இளைஞர் கைது

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் உள்ள மத்திய வங்கியின் தங்க விற்பனைப்பிரிவில் 15 லட்சம் ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகளை வாங்கிய இரு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இலங்கை வந்த போது சுமார் ஏழு லட்சம் ரூபா பெறுமதியான டொலர் நாணயங்களைக் கொண்டு வந்தனராம்.

ஆனால் இதற்கு மேல 8 லட்சம் ரூபாவை எவ்வ பெற்று இத்தங்கக்கட்டிகளை வாங்கினர் என்பதா சந்தேகத்தில் கைதாகி பதாக தெரிவிக்கப்படு

வடபகுதி...

படுத்து மீண்டும் பணிக்கு அமர்த்தப்பட்டிருப்பதாகவும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (38)

மண்ணெண் ...

ணால் மண்ணெண்ணெய் விலை வீழ்ச்சியடையலாமென்றும் வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை அனுராதபுரம் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தில் வடபகுதி லொறிகள் பல மண்ணெண்ணெயைப் பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (ப2)

## இனம் தெரியாத சடலம் மீட்பு

மிருசுவில் வடார்க்காடு தோட்டப் பகுதிக் காட்டுக் கரையில் சுமார் 55, வ மதிக்கத்தக்க ஒருவயதான தூக்குப்போட்டு தற்கொலை செய்துள்ளார்.

இவர் தூங்கிய மரத்தின் அடிவாரத்தில் நீல நிற ஏசியா சைக்கிள் ஒன்றும் இருந்தது. சைக்கிளின் இலக்கம் - 006 ஏபி 1441.

உறவினர்கள் மிருசுவி விடுதலைப்புலிகள் மக்க முன்னணி அலுவலகத்தி வந்து சந்திக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.